Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 3?8 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி உண:

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது தை 29 ஆம் நாள் ரம்ழான் 26 11 2-64 செவ்வாய்க்கிழமை இதழ் 1

உரம்

சகலவிதமான பயிர்களுக்கும்
வேண்டிய பசளை
பெற்றுக்கொள்ளலாம்

ஆ. மா. கிருஷ்ணபிள்ளை
அளவெட்டி.

எஸ் ஜே வி. தலைமையில் திங்களன்று மறியல்

3 தினங்களுக்கு எம். பி.க்களின் சூறவளிப் பிரசாரத்திட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழ்ப் பகுதிகளில் உத்தியோக மொழியான சிங்களத்தை அமுல் நடத்துவதை எதிர்த்து தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கவிருக்கும் நேரடி நடவடிக்கையின் முதல் அம்சமாக இம்மாதம் 17-ந் திகதி திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்யட்சகர் காரியாலயத்திற்கு முன்பாக அல்லது யாழ்ப்பாணம்வன இலாகா காரியாலயத்திற்குமுன்பாக திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் மறியல் இயக்கம் ஆரம்பிக்கப்படும்.

இதற்கு முன்னேடியாக யாழ்ப்பாணத்திலுள்ள தொகுதிகளில் தமிழரசுக் கட்சி எம். பிக்கள் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் ஒவ்வொரு சந்திகளிலும் ஒலிபெருக்கி பூட்டிய கார்களில் சென்று 'சூறவளிப் பிரசாரம்' செய்வர். சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம்கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும். ஞாயிற்றுக் கிழமைமாலை மறியல் இயக்கத் தொண்டர்களுக்கு கட்சித் தலைவர்கள் உரைநிகழ்த்துவதுடன் பயிற்சியுமளிப்பார்களென அறிவிக்கப்படுகிறது:

'எந்தச்சூழ்நிலையிலும்பலாத்காரசம்பவங்களில் நாங்கள் ஈடுபடமாட்டோம். அகிம்சையே எங்கள் ஆயுதம். சாத்வீகப் போராட்டமே எமது திட்டம்" என்று தமிழரசுக் கட்சிப் பிரமுகரும் ஊர்காவற்றுறை எம். பி. யுமான திரு. வி. நவரத்தினம் தெரிவித்தார்.

உடுவில் வட்டுக்கோட்டைத் தொகுதிகளிலும்யாழ்ப்பாணத் தொகுதியில் ஒரு பகுதியிலும் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கமும் வி. தர்மலிங்கமும் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களிலும் ஒலிபெருக்கி பூட்டிய கார்களில் சென்று சந்திக்குச் சந்தி பிரசாரம் செய்வர். இதே போன்று உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய தொகுதிகளில் திரு. க. துரைரத்தினம், திரு. வே. ஜெயக்கொடி ஆகியோரும், சாவகச்சேரி, கோப்பாய், நல்லூர், மற்றும் யாழ்ப்பாணத் தொகுதியின் மற்றொரு பகுதியில், திரு. வி. என். நவரத்தினம், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆகியோரும் பிரசாரம் செய்வர்.

மண்டைதீவில் அண்ணனும் தங்கையும் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்

அம்மா தற்கொலை செய்த ஐந்து வருடத்தின் பின் அண்ணனும் தங்கையும் தற்கொலை செய்து மாண்ட பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் மண்டைதீவில் நிகழ்ந்துள்ளது.

மண்டைதீவைச் சேர்ந்த ஆறுமுகம் வரதசிங்கம் என்னும் 20 வயது இளைஞனும், ஆறுமுகம் திலகவதி எனனும் 16 வயது யுவதியுமே தற்கொலை செய்து கொண்ட அண்ணனும் தங்கையுமாவர்.

இவர்களின் மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

இறந்தவர்களின் சகோதரரான ஆறுமுகம் ஜெகநாதன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

எங்களில் ஒரு பெண்ணும் 3 ஆண்களும் சகோதரர்கள். எங்கள் தாயார் 5 வருடங்களுக்கு முன் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். அதன்பின் அக்காதான் குடும்பப் பொறுப்பு முழுவதையும் கவனித்து வந்தார். மனக்கவலையுடனும் மனக்கஷ்டத்துடனும் அவர் இருந்தார். அம்மாவைப் போல் தானும் மருந்து குடித்துத் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அவர் அடிக்கடி கூறி வந்தார்.

நேற்றுக் காலை 7 மணியளவில் என் தகப்பனாரும் மூத்த தமையனார் பகவத்சிங்கமும் தோட்டத்துக்குப் போனார்கள். சிறிது நேரம் கழித்து நான் கிருமிநாசினி தகரத்தையும் அதைத் தெளிக்கும் பம்பையும் எடுத்துக் கொண்டுதோட்டத்துக்குப் புறப்பட்டேன். இச்சமயம் மாடு கன்று போட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டதும் நான் அவற்றைக் கீழே வைத்து விட்டு மாட்டடிப் பக்கம் சென்றேன். அங்கிருந்து திரும்பி வருகையில் அக்கா கிருமிநாசினி தகரத்தைத் திறந்து அதை நாக்கினால் நக்கிக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த சிறிய தாயார் ஓடி வந்து அதைப்பறித்து எறிந்து விட்டு நல்லெண்ணெய் பருக்கி

(6-ம் பக்கம்பார்க்க)

வங்கி சிருப்பர் தற்கொலை

நுவரெலியா, திங்கள்

நுவரெலியாவிலுள்ள வங்கியொன்றில் காஷியராகக் கடமையாற்றிய ஒருவர், அங்கு பணம் பற்றாக்குறை ஏற்பட்டதால் தற்கொலைசெய்துகொண்டதாக அறியப்படுகிறது.

சீனத்துணி இப்போதில்லை

கொழும்பு, திங்கள்

சீனு இலங்கைக்குக் அளித்துள்ள 2 கோடி 40 லட்சம் பார் ஜவுளி சிங்களப் புதுவருடத்தின் போது கிடைக்காது எனத் தெரிகிறது.

வருகிற 15-ம் திகதி மூவரடங்கிய ஒரு தூதுகோஷ்டி இது விஷயமாகப் பேச சீனுவுக்குச் செல்கிறதாயினும், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் அது விநியோகத்திற்குக் கிடையாது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

போத்தல் பஞ்சம் இருக்காது

கொழும்பு, திங்கள்

இலங்கையின் போத்தல் தேவை முழுவதும், உள்நாட்டு உற்பத்தியின் மூலம் சாத்தியம் என அறிவிக்கப்படுகிறது. இலங்கையர்கண்ணாடித் தொழிற்சாலையின் சமீபத்திய உற்பத்தி இதை நிரூபிக்கிறது. கலால் இலாகாவுக்கு1½ லட்சம் பெரிய போத்தல்களும் 50 லட்சம் சிறிய போத்தல்களும் அது சப்ளை செய்தது. நூரளை பியர் தொழிற்சாலைக்கு 8,60,000 போத்தல்களை அது சப்ளை செய்தது.

யாழ்ப்பாண நகரில் தீ!

பெற்றோல்தாங்கி லொறி எரிந்தது

யாழ்ப்பாணம் பெட்ரோல் நிலைய சந்தியில் நேற்று முற்பகல் பெட்ரோல் தாங்கியொன்று தீ பிடித்து எரிந்தது.
படம் — கொழும்பு ஸ்ருடியோ

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண நகரில் நேற்று முற்பகல் ஏற்படவிருந்த பெரும் தீவிபத்து தக்க சமயத்தில் பொதுமக்களும் பொலிசாரும் எடுத்த நடவடிக்கை காரணமாகத் தவிர்க்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, ஸ்டான்லி வீதி சந்தியிலுள்ள மூன்று பெட்ரோல் நிலையங்களில் ஒரு நிலையத்துக்கு பெட்ரோல் கொண்டு வந்து நிரப்பிய பெட்ரோல் தாங்கி லொறி திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. சாரதி தனது ஆசனத்திலிருந்து பாய்ந்து உயிர் தப்பினர். பெட்ரோல் தாங்கியிலும் டயர்களிலும் தீபற்றிக்கொண்டதால் அவை வெடிக்கவும் ஆரம்பித்தன பெருந்திரளான மக்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனரெனினும் அதன் அருகில் சென்று அணைக்கும் முயற்சியிலிறங்க அஞ்சினர். பெட்ரோல் நிலையத்துக்கும் தீ பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டதுடன் பெட்ரோல் நிலையத்தின் ஒரு ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மற்றுமொரு லொறி மீதும் தீ பிடித்துக்கொண்டது.

நிலைமை மோசமாகலாமெனக் கண்டதும் பொதுமக்கள் சிலரும் அங்கு வந்த பொலிசாரும் சாக்குகளையும் மண் நிறைத்த சாக்குகளையும் லொறிமீது வீசியும் வாளிகளில் கண்ணீர் நிரப்பி ஊற்றியும் நெருப்பை அணைத்தனர். பொதுமக்கள் பலர் தீவிரமான போராட்டத்தின் பின் தீ அணைக்கமுடியும் சமயத்தில், தீ அணைப்பு வாயு உள்ள கருவி கொண்டுவரப்பட்டு தீ முற்றாக அணைக்கப்பட்டது.

யாழ். கச்சேரிக்கு தீ வைக்க முயற்சியாம்!

கொழும்புப் பத்திரிகை பரபரப்பு; அரசாங்க அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபரின் வாசஸ்தலத்துக்குத் தீ வைக்கப்பட்டதாகவும், வாசஸ்தலம் தீப்பிடித்து எரிந்ததாகவும் கொழும்பில் வெளியாகும் ஓர் 'ஆங்கில' மாலைப் பத்திரிகையில் நேற்று வெளிவந்த செய்தி கொழும்பு நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது

தீ வைக்க எத்தனித்தனர்

தீ விபத்து பற்றி அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவிடம் நமது நிருபர் கேட்டபொழுது அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

"நேற்றிரவு கச்சேரியில் திறைசேரிப்பகுதிக்கருகில் யாரோ

(6-ம பக்கம் பார்க்க)

மணிவாக்கு

சுத்தமான எண்ணமும் வாழ்க்கையும் தீவிர சக்தி வாய்ந்தன. நாகரிகத்தைக் காத்து, மக்களை விடுதலை செய்யக் கூடியது. யாரும் எந்தச் சமயமும் இச்சக்தியை வளர்த்துப் பயன் படுத்த முடியும்.

—தெனஸ்டன் டிவிட்ஷல்

ஈழநாடு
EELA NADU
EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
தை மீ 29 உ. (11-2-64)

ஆறாவது வயது

இப்போது 'ஈழநாடு' பத்திரிகைக்கு ஐந்து நிறைந்து ஆறாவது வயது ஆரம்பமாகியுள்ளது. "சென்ற ஐந்தாண்டுகளிலே, யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தினசரிப் பத்திரிகை வெளிவந்து தொண்டு செய்வது எவ்வளவு அவசியமும் முக்கியமும் என்பதை பன்முறையும் 'ஈழநாடு'' நிரூபித்துக்காட்டியுள்ளது. இலங்கையிலே முதல் முதலாக ஒரு மாகாணத் தலைநகரிலிருந்து ஒரு தினசரிப் பத்திரிகையை ஆரம்பித்து ஐந்தாண்டுகளாக நடத்திவருவது துணிச்சலான ஒரு பெரிய சாதனை. இதைப் பற்றி ''ஈழநாடு''ம், ஈழத்து மக்களும் பெருமை கொள்ளலாம். இப்பணி மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டும்" என்று ஒரு பெரியார் ஆசிகூறி வாழ்த்துகின்றார்.

இறை அருளும், அன்பர்களின் ஆதரவும், ஊழியர்களின் தியாக சேவையும்தான் 'ஈழநாடு' இப்பணியைச் செய்ய முடிவதற்குக் காரணம். அவர்களுக்கெல்லாம் 'ஈழநாடு' தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. சோதனைகள் இன்றும் பல உண்டு. என்றாலும் இந்த நற்பணியை மேன் மேலும் வெற்றிகரமாகச் செய்ய திருவருளும், அன்பர்களின் ஆதரவும் அமோகமாகக் கிடைக்குமென்ற திட நம்பிக்கையுடனும், புது உற்சாகத்துடனும், 'ஈழநாடு' தனது ஆறாம் வருடத்திலே இப் புனிதப் பணியை பணிவுடன் செய்ய முன்வருகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு தீயணைக்கும் படை

யாழ்ப்பாண நகரமே தீப்பிடித்து எரியக் கூடிய ஒரு பெரும் விபத்து நேற்று ஏற்படவிருந்ததெனினும் தெய்வாதீனமாக தவிர்க்கப்பட்டுவிட்டது. இதற்காக இறைவனுக்கும், உயிரையும் மதியாது துணிந்து தீயை அணைக்க உதவி புரிந்த பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் நன்றி கூறவேண்டும்.

யாழ்ப்பாண நகரின் மத்தியில் வர்த்தக ஸ்தாபனங்களும் படமாளிகைகளும் உள்ள நெருக்கமான இடத்தில் இரு பெட்ரோல் நிலையங்கள் அருகருகேயுள்ள சந்தியில் ஒரு பெட்ரோல் தாங்கி லொறியைப் பிடித்த தீ, ஒருபெட்ரோல் நிலையத்துக்குத் தாவியிருந்தால் நகர முழுவதுமே பரவி அழிந்திருக்கக்கூடிய ஆபத்தான நிலை ஏற்பட்டிருக்கும். தீயை அணைக்க வசதியில்லாத யாழ்ப்பாணத்தின் நிலைமை எப்படியிருக்குமென்பதை மனதால் நினைத்துப் பார்க்கவே பயங்கரம். அவ்வித கோர சம்பவம் நிகழாமல் தடுக்கப்பட்டுவிட்டது ஆறுதலளிப்பதாக இருப்பினும் இத்தீவிபத்து யாழ்ப்பாணத்துக்கு தீயணைப்புப்படையொன்றின் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

இலங்கையின் தலைநகரான கொழும்புக்கு அடுத்த பெரிய பட்டினம் யாழ்ப்பாணம். ஜன நெருக்கமும் வர்த்தக நிலையங்களும் நிறைந்த இடம். இங்கு ஒரு தீயணைப்புப்படை இருக்க வேண்டிய அவசியத்தை பலரும் பலமுறை எடுத்துக்கூறியிருப்பினும் இதுவரை அதற்கான முயற்சிகள் செய்யப்படாதது வருந்தத்தக்கது. பொதுமக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. தீவிபத்து ஏற்படாமல் பார்ப்பதும் விபத்து ஏற்பட்டால் அதை உடனடியாகத் தடுத்து நிலைமை மோசமாகாமல் பாதுகாப்பமேதசக்கியம். விபத்து ஏற்பட்டபின் அதற்கான காரணத்தை ஆராய்வதற்குமுன் அதைத் தடுக்க வேண்டியதே அவசியமான செயல்.

தீவிபத்து ஏற்பட்டால் அதை உடனடியாக அணைத்து உயிரையும் உடைமையையும் பாதுகாப்பதற்காக தீயணைப்புப்படையொன்றை அமைக்கும் விஷயத்தில் யாழ்ப்பாண மாநகரசபையும் அரசாங்கமும் இனியாவது கவனம் செலுத்த வேண்டும். மாநகரசபையிடம் நிதிவசதியில்லையெனக் கூறக்கூடுமென்றாலும் அத்தியாவசிய தேவையான தீயணைப்புப்படையை அமைப்பதற்கு அரசாங்கத்திடம் வாதாடி அதை நிறுவ வேண்டியது மாநகரசபையினதும் மற்றும் பிரதிநிதிகளினதும் முக்கிய கடமையாகும்.

சைவமகாசபை ஆண்டுவிழா

களுவாஞ்சிக்குடி, திங்கள்

பெரியகல்லாற்றுச் சைவ மகாசபையின் விசேட நிர்வாக சபைக் கூட்டம் தலைவர் திரு. மு. மார்க்கண்டு வண்ணக்கர் தலைமையில் நடைபெற்றபோது ஏப்ரல் விடுமுறையில் பெரியகல்லாற்று சைவமகாசபையின் ஆண்டுவிழாவை மிகவும் சிறப்பானமுறையில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

வழக்கமாக நடந்துவரும் சமயபாட வகுப்புகளில் விசேட தேர்ச்சி அடைபவர்களுக்கும் கூட்டுப்பிரார்த்தனைகளில் ஒழுங்காகக் கலந்துகொள்பவர்களுக்கும் பரிசில்கள் வழங்குவதெனவும் பாடசாலை மாணவர்கட்கிடையே பேச்சுப்போட்டி தேவாரப்போட்டி என்பன நடத்தி பரிசில்கள் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் பி. எஸ்.

'யாழ்ப்பாணத் தாத்தா' 'வைத்தியத் தாத்தா' என அன்புடன் அழைக்கப்பட்டு வந்த டாக்டர் (பி. எஸ்.) சுப்பிரமணியம் மறைந்து இன்றுடன் 31 தினங்களாகின்றன. இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளை முன்னிட்டு அவரது நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஈழத்தின் சரித்திரத்தில் 19-ம் நூற்றாண்டு முக்கியமானது என்று சொல்லலாம். 19-ம் நூற்றாண்டில் விசேடமாகப்பல தமிழ்ப் பெரியார்கள் தோன்றி அரசியல் சமூகபொருளாதார முன்னேற்றத்திற்கும் சமய, மொழி முன்னேற்றத்துக்கும் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்த அழியாப் புகழெய்தினர். இவ்வாறு அரும் பெருஞ் சேவைகள் செய்த பேராற்றல் வாய்ந்த மகான்கள் வரிசையிலே முதலில் வைத்து எண்ணப்படுபவரும் ஈழத்தின் செஞ்ஞாயிறு என்று தாய்நாட்டாராலும் சேய்நாட்டாராலும் வியந்து பேசப்பட்டவருமான நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் 1823-ம் ஆண்டு மார்கழி மாதம் 21-ந் திகதி திருவவதாரம் செய்தார்கள். அவர்களைத் தொடர்ந்து தமிழ் தந்த சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளை அவர்கள், சேர். பொன். இராமநாதன் அருணாசலம் சகோதரர்கள், சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப்புலவர் அவர்கள், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி போன்ற பல பேரறிஞர்களை ஈழத்தமிழ்த் தாய் ஈன்றெடுத்தார். இவர்களைவிட இருபாலைச் சேனாதிராய முதலியார், சின்னத்தம்பிப் புலவர், நாவலர் தமையனார் புத்திரர் த. கைலாசபிள்ளையவர்கள் முதலிய பெரியோர்களும் இன்னும் பல பெரியோர்களும் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கிறார்கள்.

பி. எஸ். ஐயா பிறப்பு

இத்துணைச் சிறப்பு வாய்ந்த 19-ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் 1873ல் பரோபகாரசிந்தையும் வாய்மையெனும் வண்மையும் வாய்க்கப்பெற்றவராகிய வைத்திய சிரோமணி எஸ். சுப்பிரமணியம் அவர்கள் (டாக்டர் பி. எஸ்.) தோன்றினார்கள். தந்தை சின்னத்தம்பியார். தாயார் கதிராசிப்பிள்ளை அம்மையார். இலங்கையிலும் இந்தியாவிலும் படித்து உயர்தர டாக்டரான சுப்பிரமணியம் அவர்கள் கற்பு என்னும் பொற்பு வாய்ந்த தங்கம்மா என்னும் நற்குணமாதை மணம் புரிந்தார். ஈழநாட்டின் பல பாகங்களிலும் சேவையாற்றி மக்கள் மனதில் அழியாத இடம் பெற்றார்கள்.

தோற்றம்

டாக்டரவர்களைப் பழுத்துக் கனிந்த கனியென்றும், வைத்திய சிரோமணி என்றும், பரந்த ஞானி என்றும், வள்ளல் என்றும், தமிழர் கருவூலம் என்றும் வாழ்த்தினர். உடலில் மிக மெலிந்தவர், ஒழுக்கத்தில் மிகப் பெரியவர், அருளொழுகு கண்கள், அன்பினொடு புன்முறுவல் செய்யும் செவ்வாய், அழகிய நீண்ட நரைத்த மீசை, தாடையிலே சிறு காய், அரையிலே நான்கு முழமாக மடித்துக் கட்டப்பட்டிருக்கும் பால் போன்ற எட்டு முழ வேட்டி, உடலில் ஒரு சிறு சட்டை. இதுதான் பி. எஸ். ஐயா அவர்களின் கருணையே உருவான கவின் மிகு தோற்றம்.

சேவை

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு'. அந்த உயர்ந்த உலகத்தவர்களிலே ஒருவர் தான் நமது சுப்பிரமணிய டாக்குத்தரவர்கள். திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை, சுப்பிரமணிய மண்டபம், தங்கம்மா மருத்துவ இல்லம், சுப்பிரமணியம் பூங்கா, ஸ்கந்த வரோதயக் கல்லூரி முதலியன டாக்டரால் அமைக்கப்பட்ட அறநிலையங்களாம். இன்னும் பலவுள. கேட்பவர்கள் மனம் பூரிப்படைய அள்ளி அள்ளிக் கொடுத்த தர்ம கரம், பி. எஸ். அவர்களது வலது கரம். கொடுத்துக் கொடுத்து நீண்ட கரம் அந்தக் கரம். வலது கரம் கொடுத்தது இன்னதுதான் என்று என்றும் அறியாதது ஐயாவின் இடது கரம்.

நோய் பறக்கும்

தேவர்கள் மனித உரு தாங்கி இப்பூவுலகில் சஞ்சரிப்பது உண்டு. அவ்வாறு சஞ்சரித்த தேவர்களுள் ஒருவரே நமது டாக்டரவர்கள் என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களே கூறியுள்ளார்கள்.

'மனிதருள்ளுந்தேவர் மனித
உருத் தாங்கி
இனிதமர்வ துண்டேயா மெங்
கள் — வியமிர்கம்
டாக்டர் சுப்ரஹ்மண்யம் இவ்
வலகத் தெய்வங்காண்
மாப் பெரியார் இந்த மகான்!

சுப்பிரமணிய டாக்குத்தரவர்கள் முகதரிசனம் பட்டாலே நோய் பறக்கும். ஒருநாள் பண்டித மணிக்கு கடும் தொய்வு. உடனே டாக்டர் அவர்கள் பரிசோதனை செய்து ஒரு ஊசி போட வேண்டும் என்றார்கள். அதன்படி பெரிய உலக்கை போன்ற ஒரு ஊசியை எடுத்து சற்றும் கை பதறாமல் ஏற்றினார்கள். நோய் தாங்காது வடிவிழந்து ஒடுங்கிப்போயிருந்த பண்டிதமணி அவர்கள் ஒரு சில நிமிஷங்களில் சுகம் கண்டார்.

6-5-'3ல் நடைபெற்ற பண்டித மணியின் 'சமயக் கட்டுரைகள்' நூல் வெளியீட்டு விழாவில் டாக்குத்தரையா பேசிய வசனங்கள் அமிர்த வசனங்கள்.

மறைவு

61 வருடங்கள் கணமுங்கவலாது வைத்திய தொழிலை பொதுஜன சேவையாகக் கருதிய வைத்தியத் தாத்தா அவர்கள் 12-1 64 ஞாயிறு பிற்பகல் 3-30 மணிக்கு தமது 91-ம் வயதில் காலமானார் என்னும் செய்தி கேட்டு ஈழத்தமிழ் மக்கள் கண்ணீர் விட்டனர். பி. எஸ். ஐயா அவர்களுக்கு, தமது இறுதி அஞ்சலியைச் செலுத்த சாதி சமய வேறுபாடின்றி யாவரும் கூடி நின்றனர். அப்பொழுது ஒரு கிழவி வாய்க்கரிசி இடும்போது 'தர்மவானுக்கு வாய்க்கரிசி இடுகின்றேன்' என்று கதறி அழுத காட்சி நாவலர் தமையனார் புத்திரர் கைலாசபிள்ளை அவர்கள், சுன்னாகம் குமாரசாமி புலவர் அவர்களுக்கு வாய்க்கரிசியிடும் போது 'தமிழுக்கு வாய்க்கரிசி இடுகின்றேன்' என்று கதறி அழுத கதையை ஞாபகமூட்டியது.

60 வயது சென்றால் வீட்டுக்கு நாய் வேண்டாமென்று நாடோடியாகச் சொல்வார்கள். இந்தக் கிழவனுக்கு வயது 60, 70 ஆகிவிட்டது ஏன் இன்னும் இருந்து எங்களுக்குக் கரைச்சல் கொடுக்கிறார் என்று நச்சரிப்பவர்களும் உளர். பி. எஸ். ஐயா அவர்களுக்கு வயது 91 ஆகியும் கூட அன்பு மிகுதியால் இந்தக் கிழவன் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளாவது இருந்து நமக்குத் தொண்டு செய்யக் கூடாதா? கடவுளே! ஏன் இவ்வளவு கெதியில் இந்த மகானை அழைத்துவிட்டாய்? என்று அங்கலாய்த்தனர்.

நமது கடன்:- பி.எஸ்.ஐயா அவர்கள் தமது இறுதி மூச்சு வரை எமக்குத் தொண்டு செய்தார். தமிழ் மக்கள் எல்

(6-ம் பக்கம் பார்க்க)

ஐயாறன் எழுதுவது

சுமார் ஒருமாத காலம் இந்தியாவில் சுற்றிவிட்டுத் திரும்பினேன். அங்கிருந்து வரவே மனமில்லை. இனி எப்பொழுது போகமுடியுமோ!

ஏழு வருடத்துக்கு ஒருமுறை விடுமுறையில் செல்லலாமென்று இருந்ததையும் நமது காருண்ய அரசாங்கம் இப்போது நீக்கிவிட்டது. ஜன்மத்துக்கு ஒருமுறை புனித யாத்திரை செல்லலாமென்பதையும்கூட நீக்கிவிடுவார்கள் என்று ஓரன்பர் பயமுறுத்துகிறார். 'எல்லாம் அவன் செயல், நடப்பதெல்லாம் நன்மைக்கே' என்ற பொய்யாமொழியை நினைத்துக்கொண்டு எல்லாம் சீக்கிரம் தீருமென்று ஒருவிதமாக ஆறுதல் அடையவேண்டியதே.

* * *

இந்தியாவில் நிலைமை எப்படி இருக்கிறது, வாழ்க்கைச் செலவெல்லாம் எப்படி? என்று பல அன்பர்களும் ஆவலுடன் விசாரிக்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன் பார்த்ததைவிடப் பல இடங்களிலும் பல பல அபிவிருத்திகளைக் கண்டேன். புதுக் கட்டடங்கள், புதுப்புதுத் தொழிற்சாலைகள். நல்ல விளைச்சல். ஆனால் விலைவாசிகள் மிக அதிகம்.

சாப்பாட்டுக் கட்டணம் பல இடங்களிலும் வெவ்வேறாக உள்ளது. ஒரு ஊரில் ருசியான நல்ல சாப்பாடு. கறி, கூட்டு, பச்சடி, சாம்பார், ரசத்துடன் 50 காசுதான். ரயிலிலே போஜனசாலையில் ஒன்று முதல் ஒன்றரை ரூபாய் வரையில் உள்ளது. சென்னை முதலிய நகரங்களில் ஹோட்டல்களில் முக்கால் ரூபாய்.

* * *

முன்பெல்லாம் எங்கு பார்த்தாலும் பிச்சைக்காரர் தொல்லை அதிகமிருக்கும். இப்போது, பிச்சைக்காரர் தடைச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளதால், அந்தத் தொல்லை [illegible] ஆனால் மானாமதுரை ஸ்டேஷனிலே, பல குழந்தைகள் கதறிக் கதறி பிச்சை கேட்பது பெரிய [illegible] என்னுடன் அதே ரயிலில் வந்த சில அமெரிக்கர் இந்தப் பிச்சைக்காரரைக் கண்டனர். அவர்கள் என்ன நினைத்தார்களோ!

'இரந்தும் உயிர் வாழவேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்' என்ற திருக்குறள் தான் எனக்கு அப்போது நினைவுக்கு வந்தது. இதெல்லாம் எப்போது தான் விமோசனமோ!

* * *

சென்னையிலே ராஜாஜி, காமராஜ் இவர்களைப் பார்த்தேன். அரசியலிலே இருவருக்கும் வெகுதூரமென்றாலும், இவ்விரு தலைவர்களும் மாம்பலத்திலே சில கஜதூரத்துக்குள் வசிக்கிறார்கள். காமராஜரைப் பார்க்க, அதிகாலை முதல் நீண்ட 'கியூ' வரிசையில் மக்கள் பூமாலை, செண்டு, பழம் இவற்றுடன் காத்திருக்கிறார்கள். பாவம் அவருக்குச் சற்றும் ஓய்ச்சல் ஒழிவு இல்லை.

நேருவுக்கு அடுத்தபடி காமராஜரே இந்தியாவின் பிரதமராக ஆகவேண்டுமென்றும், அதற்கான தகுதி அவருக்கு உண்டென்றும் சிலவட்டாரங்கள் கருதுகின்றன. ஆனால் அவரோ நேருஜியின் புதல்வி இந்திராவை பிரதமராக்கவே முனைந்திருப்பதாக பலத்த வதந்திகள் அடிபடுகின்றன. நேருஜி வேகமாக குணமடைந்து வருவதைக் கண்டு பலருக்கும் மகிழ்ச்சியும் ஆறுதலும் என்றாலும் அவர் அப்பதவியில் நீடித்திருக்கமாட்டார் என்றும் அவர் பூரண ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டி இருக்குமென்றும், புதிய பிரதமா வரலாமென்றும் இலங்கையைப் பின்பற்றி இந்தியாவிலும் ஒரு பெண்மணியே பிரதமராகக் கூடுமென்றும் பொதுவாகப் பேச்சு அடிபடுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

பாங்காக் மகாநாட்டில் அதிக முன்னேற்றம் இல்லை

துங்கு ரஹ்மான் அறிவிப்பு

கோலாலம்பூர், பெப். 10

பாங்காக்கில் நடைபெற்று வரும் முக்கூட்டு மகாநாட்டில் அதிக முன்னேற்றம் இல்லை என மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

பாங்காக்கில் நேற்று மலேஷிய உதவிப் பிரதமர் துங்கு அப்துல் ரஸாக் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோவை மீண்டும் சந்தித்துப் பேசினார்.

போர்ணியோவில் சண்டை நிறுத்தம் சம்பந்தமாகத் தேக்கநிலை ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

பாங்காக் மகாநாட்டின் வெற்றிதோல்வியைப் பொறுத்தே மூன்று நாடுகளின் உயர் தலைவர்கள் மகாநாடு அமையும் எனவும் மலேஷியப் பிரதமர் கூறினார்.

துங்கு ரஹ்மான் இன்று பிலிப்பைன்ஸ அதிபர் மகபகாலுடன் பேச்சு நடத்துவதற்காக கம்போடியத் தலைநகர் நாம்பென் சென்றார். நேற்று கம்போடியத் தலைநகரில் திரு மகபகால் பேசியபோது, துங்குவுடன் தாம் நடத்தும் பேச்சு வெற்றிபெற்றால் இப் பகுதிக்கு நன்மை ஏற்படும் எனக் கூறினார்.

சண்டையை நிறுத்துமாறு யுதாண்ட் வேண்டுகோள்

எதியோப்பியாவுக்கும் சோமாலியாவுக்கும் தந்தி

நியூயோர்க், பெப். 10

எதியோப்பிய — சோமாலிய எல்லையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யுமாறு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் எதியோப்பிய சக்கரவர்த்தி ஹெயிலி ஸலாஸிக்கும், சோமாலியப் பிரதமருக்கும் தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இரு நாடுகளையும் மிகுந்த நிதானத்துடன் நடக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இரு தேசப்படைகளுக்கு மிடையே நேற்றும் தொடர்ந்து சண்டை நடைபெற்றது. டாங்கிகளையும், கனரக ஆயுதங்களையும் கொண்டு சோமாலியர் தாக்குதல் நடத்தியதாக எதியோப்பியா அறிவித்திருக்கிறது.

அரசியலிலிருந்து மாக்மில்லன் விலகுவார்

லண்டன், பெப். 10

கடந்த அக்டோபர் மாதம் பிரதமர் பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்த திரு மாக்மில்லன், அடுத்த பொதுத் தேர்தலில் தாம் பார்லிமெண்டுக்கு நிற்கப்போவதில்லை எனக் கூறினார்.

இதன் படி இரு கன்சர்வேட்டிவ் பிரதம மந்திரிகள் காமன்ஸ்சபையிலிருந்து அகல்கிறார்கள்.

அடுத்த மே மாதம் 90 வயதை அடையும் சர்வின்ஸ்டன் சர்ச்சிலும் அடுத்த தேர்தலில் நிற்கப்போவதில்லை எனக் கடந்த மே மாதம் அறிவித்தார்.

திரு. மாக்மில்லன் 1924-ம் ஆண்டு பார்லிமெண்டுக்கு முதல் தடவை தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதமர் பதவியை ராஜிநாமாச் செய்த பின் அவர் காமன்ஸ் சபைக்கு அபூர்வமாகவே வந்து சென்று கொண்டிருந்தார்.

பிரிட்டிஷ் பிரதமர் கனடா பயணம்

லண்டன், பெப். 10

பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர் அலெக் டக்ளஸ்ஹியூம் நேற்று ஒட்டாவாவுக்குச் சென்றார். அங்கு கனேடியப் பிரதமரைச் சந்தித்துப் பேசிய பின் அடுத்த புதன் அல்லது வியாழக்கிழமை வாஷிங்டன் சென்று ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்திப்பார். வெளிநாட்டு மந்திரி திரு. பட்லரும் அவருடன் செல்கிறார்.

சைப்ரஸில் இன்னும் நெருக்கடி

நிக்கோஸியா, பெப். 10

வடமேற்கு சைப்ரஸில் இன்னும் நெருக்கடியான நிலை இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காந்திபவனம்

புதுடில்லி, பெப். 10

நாகபுரி பல்கலைக்கழகத்தில் காந்திபவனத்தை ஸ்ரீமன் நாராயண் துவக்கிவைத்தார்.

பர்மியத் தலைவரின் ராஜாங்க விஜயம்

இன்னும் திகதி குறிப்பிடப்படவில்லை

புதுடில்லி, பெப். 10

பர்மிய பிரதமர் நீவின் இந்தியாவுக்கு ராஜாங்க முறையில் விஜயம் செய்வார் என்றும், அதற்கான திகதி நிச்சயப்படுத்தப்படவில்லையென்றும் இந்திய வெளிநாட்டு இலாகா காரியதரிசி திரு. கண்டேவியா கூறினார்.

பிரதமர் நேருவின் சுகவீனம் பற்றியே அவர் ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டார் என்றும், இருந்தபோதிலும் மண்டல சார்பற்ற மகாநாடு, ஆசிய-ஆபிரிக்க மகாநாடு, சீனா ஆகிய பிரச்னைகள் குறித்து விவாதிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததென்றும் அவர் கூறினார்.

ஜெனரல் நீவின் ரங்கூன் புறப்படுமுன்பு, பிரதமர் நேருவைப் போய்ப்பார்த்தார்.

அகதிகள் மீது பாக். துப்பாக்கிப்பிரயோகம்

புதுடில்லி, பெப். 9

அஸ்ஸாமுக்குள் வரமுயன்ற அகதிகள் மீது கிழக்குப்பாகிஸ்தானியர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், காயமடைந்த ஒருவர் மட்டுமே தப்பிவரமுடிந்ததென்றும் அறிவிக்கப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏற்பட்ட சேதம் எவ்வளவென்றும் அறிவிக்கப்படவில்லை. அகதிகள் மீது பாகிஸ்தானியர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது இது இரண்டாவது தடவையாகும்.

பெல்கிரேட்டில் திரு. பீரிஸ்

பெல்கிரேட், பெப். 10

இலங்கை வெளிநாட்டிலாகா காரியதரிசி திரு. பீரிஸ், மண்டல சார்பற்ற மகாநாடு சம்பந்தமாகப் பேச்சு நடத்தும் பொருட்டு பெல்கிரேட் வந்து சேர்ந்தார்.

ஹிந்துமகாசபா கூட்டம்

கல்கத்தா, பெப். 10

அகிலபாரத ஹிந்து மகாசபையின் 2 நாள் கூட்டம் நேற்று முடிவடைந்தது. கிழக்கு பாகிஸ்தான் கலவர நிலைபற்றி ஆராய ஐ. நா. சர்வதேசக் கமிஷன் ஒன்றை அனுப்பவேண்டுமென மகாநாட்டில் தீர்மானம் இயற்றப்பட்டது.

இந்திய ரயில்வேக்கு ரூ. 42 கோடி லாபம்

புதுடில்லி, பெப். 10

1962-63-ம் ஆண்டு இந்திய ரயில்வே 17 88 லட்சம் டன் சரக்குகளை ஏற்றிச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது. அந்த ஆண்டில் ரயில்வேயின் மொத்த வருமானம் 566 கோடியே 79 லட்சம் ரூபாய். 42 கோடிரூபா நிகர லாபம் கிடைத்தது. பெரம்பூர் ரயில்வே தொழிற்சாலையில் 600 ரயில் பெட்டிகள் அப்போது உற்பத்திசெய்யப்பட்டன. ரயில்வே ஊழியர்களின் எண்ணிக்கை 12,12 000.

தங்கனீகாவில் 200 பேர் கைது

தார் எல்-ஸலாம், பெப். 10

ஆளும் கட்சியான ஆபிரிக்க தேசியக் கட்சி அங்கத்தினர்களும், பொலிஸ் அதிகாரிகளுமாக சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக தங்கனீகா ஜனாதிபதி ஜூலியஸ் நியர்ரே அறிவித்திருக்கிறார்.

ஒலிம்பிக்குக்கு 113 நாடுகள்

டோக்கியோ, பெப். 10

டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் 113 நாடுகள் கலந்துகொள்கின்றன. தென்னாபிரிக்காவுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு அதன் இனவேற்றுமை காரணமாக ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

சைகோனில் வெடி குண்டு வீச்சு

சைகோன், பெப். 10

நேற்று சைகோனில் ஏற்பட்ட குண்டுவீச்சு ஒன்றில் 2 அமெரிக்கர் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமடைந்தனர். சில தினங்களுக்கு முன் இதேபோல் ஏற்பட்ட மற்றோர் வெடிவிபத்தில் 5 பேர் மாண்டு, 39 பேர் காயமடைந்தனர்.

டென்னிஸ் கிருஷ்ணன்

புதுடில்லி, பெப். 10

ஆசிய லான் டென்னிஸ் ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை ஆர். கிருஷ்ணன் தப்பவைத்துக்கொண்டார்.

ரூ. 60 கோடி செலவில் நதி போக்குவரத்துத் திட்டம்

புதுடில்லி, பெப். 9

பிரம்மபுத்திர நதியை கிளைநதி மூலம் கங்கையுடன் இணைக்கவும், நர்மதை நதியையும் அத்துடன் இணைக்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாக பாசன மந்திரி டாக்டர் கே. எல். ராவ் கூறினார். இத்திட்டத்திற்கு 50 முதல் 60 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அவர் கூறினார்.

நாகார் ஜுனசாகர் திட்டத்திற்கு 70 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருப்பதாயும், மேலும் அதே அளவு இதற்குச் செலவாகுமென்றும், 4-ம் திட்ட இறுதிக்குள் இத்திட்டம் பூர்த்தியாகுமென்றும் மந்திரி மேலும் அறிவித்தார்.

டச்சு இளவரசி ஐரீன் பட்டத்து உரிமையைத் துறப்பார்

நிச்சயதார்த்த எதிரொலி

ஹேச், பெப். 10

டச்சு இளவரசி ஐரீனுக்கும் இளவரசர் டொன்கார்லஸ் ஹியூசோ டி' போர்டனுக்கு மிடையே நிச்சயதார்த்தச் செய்தியை, பிரதம மந்திரி திரு. விக்டர் மரிஜ்னென் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

இளவரசியும், அவரது எதிர்காலக் கணவரும் வெளிநாட்டில் வசிப்பார்களென்றும் அவர் தெரிவித்தார்.

இளவரசி ஐரீன், தமது விவாகத்துக்கு பார்லிமெண்ட் அங்கீகாரத்தைக் கோரியிருந்தார். இதன் மூலம் அவர் சிம்மாசனத்திற்கான உரிமையை இழக்கிறார்.

பார்லிமெண்டின் இரு சபைகளுக்கும் அறிவிக்கப்பட்ட பிரதமர் செய்தியில் மகாராணியும், அவரது கணவரும் இருவருடைய திருமண நிச்சயதார்த்தத்தை மனப்பூர்வமாக அங்கீகரித்திருப்பதாய்க் கூறப்பட்டது.

கானா வருத்தம்

ஆக்ரா, பெப். 10

கானாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகராலயத்திற்கு முன் ஏற்பட்ட ஆர்ப்பாட்டம் குறித்து ஆழ்ந்தவருத்தத்தை தெரிவித்துக்கொள்வதாக கானா அரசாங்கம் அறிவித்துள்ளது.

"சோஷலிச முறையே விமோசனமளிக்கும்"

சனசமூகநிலைய விழாவில் பேச்சு

நெல்லியடி, திங்கள்

"நாம் வாழ்க்கையின் சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமானால் ஒன்றுசேர்ந்து ஒரு கொடியின் கீழ் வாழமுற்படவேண்டும் ஒற்றுமையாக வாழ முற்படுவோமேயானால் எம்மை எந்தச் சக்திகளாலும் தோற்கடிக்கமுடியாது."

இவ்வாறு துன்னாலை தெற்கு தயாநிதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் தலைமைவகித்துப்பேசுகையில் வழக்கறிஞர் எஸ். ஜெயசிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "எமதுநாட்டிலுள்ளவேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, சாதி, மதபேதம் நீங்கி விமோசனம் ஏற்படவேண்டுமேயானால் சோஷலிச ஆட்சி அமைப்பு ஏற்படவேண்டும். இந்த ஆட்சிமுறையை இந்நாட்டில் அமைப்பதற்குத்தான் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் முயற்சிசெய்து வருகின்றனர் இதற்கு அண்மையில் பொரளைத் தேர்தல் தொகுதியில் வெற்றியீட்டிய திருமதி விவியன் குணவர்த்தனவே சான்று முதலாளி வர்க்கத்தினரின் ஏகாதிபத்தியம் இனி இந்நாட்டில் ஒரு செல்லாக் காசாகிவிட்டது.

சோவியத் கலாசார தூது கோஷ்டியின் தலைவர் பைதகோவ் பேசுகையில் கூறியதாவது:

"எமது சோவியத் நாடு பெரிய முன்னேற்றமடைந்ததற்குக் காரணம் தொழிலாளர்களின் சலியாத உழைப்பும், நாட்டின்மேல் ஏற்பட்ட தேசியப்பற்றும்தான் காரணம்" என்று கூறினார்.

திரு. பைதகோவ் சோவியத் சஞ்சிகைகளையும், புத்தகங்களையும் அன்பளிப்புச் செய்தார்.

சமயத்தொண்டு

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தினர், சுழிபுரத்திலுள்ள ஒவ்வொர் இல்லங்களிலும் சென்று கூட்டுப் பிரார்த்தனை நடாத்த ஏற்ற ஒழுங்குகளை செய்துள்ளனர். சமய வளர்ச்சிக்காக தொண்டு செய்ய ஓர் தொண்டர் இயக்கமும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழாசிரியர்கள் வெளிநடப்பு

கொழும்பு, ஞாயிறு

சென்ற சனிக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் கல்லூரி அதிபர்களுக்குமான ஒரு மாநாடு நடைபெற்றது.

கல்வி டைரக்டர் திரு. ஈ. எச். டி. அல்விஸ் தலைமையில் நடைபெற்ற பேச்சுக்கள் யாவும் சிங்களத்தில் மட்டுமே நடைபெற்றமையால், மகாநாட்டுக்குச் சென்ற தமிழ் விஞ்ஞான ஆசிரியர்கள் மகாநாட்டைப் பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்தனர். இம்மகாநாட்டிற்குரிய நிகழ்ச்சி நிரல் கூட சிங்களத்தில் மட்டுமே பிரசுரமாகி இருந்தது.

கல்வி அமைச்சைச் சேர்ந்த திரு. பி. ஜே. பி. அலெஸ, விஜயமானே ஆகியோரும் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர். இம்மகாநாடு சம்பந்தமாக ஆசிரியர்களுக்கு அறிவிக்கும் சுற்று நிருபம் கூடச் சிங்களத்தில் மட்டுமே கல்வித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டதென்றும் இதற்குரிய மொழிபெயர்ப்பைக் கல்லூரி அதிபர் அச்சுற்று நிருபத்தில் கொடுத்துள்ளார் என்றும் அறியவருகிறது.

புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கந்தர்மடம் சனசமூக நிலைய 64-ம் ஆண்டுக்கான புதிய உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்:- திரு. ப. அம்பிகாபதி. உப தலைவர்:- திரு. க. மகேந்திரநாதன். காரியதரிசி:- திரு. இ. து. புவனேந்திரன். தனாதிகாரி:- திரு. ந. சரவணபவான். நிலைய நிர்வாகி - திரு. பா. நந்தபாலன். உப நிலைய நிர்வாகி:- திரு. சண்முகநாதன்.

'யுத்தக் கப்பல்களை உபயோகிக்கவும்'

—கோல்ட்வாட்டர்

வாஷிங்டன், பெப். 10

கியூபாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பிரிட்டிஷ் பஸ்களையும், பிரெஞ்சு உற்பத்திப் பொருட்களையும் நிறுத்த அமெரிக்க யுத்தக்கப்பல்களை உபயோகிக்குமாறு செனட்டர் பேரி கோல்ட்வாட்டர் டெலிவிஷன் பேட்டி ஒன்றில் கூறினார்.

குவண்டமானோ ராணுவத் தளத்திற்கு கியூபா தண்ணீர் சப்ளையை நிறுத்தியவுடன் தளத்திலுள்ள அமெரிக்கத் துருப்புகளை கியூபாவுக்குள் அனுப்பியிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். "அது சில துப்பாக்கிச் சூடுகளுடன் மட்டும் முடிந்திருக்கும் அவ்வளவுதான்" என்றும் கோல்ட்வாட்டர் கூறினார்.

தர்மப்பணம்

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவுக்குள் உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவில் ஐந்து வருடங்களாக தர்மப் பணம் பெற்று வந்த பல ஏழைக் குடும்பங்கள் தர்மப் பணம் பெறும் வாய்ப்பை இம்முறை இழந்துள்ளனர். எக்காரணம் கொண்டு பணம் நிறுத்தப்பட்டது என்பது தெரியவில்லை.

மாணவர் மலர்

துப்பறியும் தொடர்நவீனம்

விசித்திர மனிதன்!

மகான்

மரணவிசாரணை அதிகாரியும் டாக்டர் மூர்த்தியும் உட்பட வேறுசில அதிகாரிகளும் அறைக்குள் நுழைவதைக் கண்ட இன்ஸ்பெக்டர் பிரான்சிஸுக்கு சிறிது மனநிம்மதி ஏற்பட்டது. அவர்களின் வரவைத்தான் இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு நிமிடமும் எதிர் நோக்கிக் கொண்டிருந்தார்.

கையிலே ஒரு நவீன காமராவுடன் நின்று கொண்டிருந்த கிருஷ்ணன், அந்த கட்டிலிலே இறந்து கிடந்த லட்சாதிபதி சங்கரலிங்கம்பிள்ளையை பலவித கோணங்களில் படம் பிடித்துக் கொண்டிருந்தார். கைரேகைநிபுணர் கஜநாதன் ஒருவிதமான பவுடரை தூவி பல ரேகைகளைப் பதிவு செய்து கொண்டிருந்தார். பொலிஸ் இலாகாவின் துப்பறியும் வேலைகள் வெகுமும்மரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் வெகு ஆறுதலாக கவனித்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ். அவர் போதிய அனுபவமிருந்ததால் சங்கரலிங்கம்பிள்ளையின் மரணத்தைக் கண்டு அவர்மனம் பதறவில்லை. ஆனால் அவரையும் அறியாமல் ஒருவித பயம் அவர் மனத்தில் குடிகொண்டுவிட்டது. அது...சங்கரலிங்கம்பிள்ளையின் மரணத்துக்குரிய மர்மத்தைத் துலக்க வேண்டிய பெரும் பொறுப்புத்தான்!

இன்ஸ்பெக்டர் பிரான்சிஸின் பார்வை முதலில் தேவிகாமீது விழுந்தது.

"நேற்றிரவு...அதாவது கடந்த இரவு, உங்களின் அப்பா எங்கும் சென்றிருந்தாரா...... கொஞ்சம் விபரமாகக் கூற முடியுமா?"

தனது அப்பா இறந்த சோகத்தில் மூழ்கிக்கிடந்த தேவிகா, தனது கண்களிலிருந்துபெருக்கெடுத்த 'ஊற்றை' துடைத்துத் துடைத்து முழுஈரமாகவிருந்த கைலேஞ்சியை மீண்டும் ஒருதடவை எடுத்து தனது கண்களில் ஒத்திக் கொண்டு ... இன்ஸ்பெக்டரின் கேள்விக்குப் பதிலளிக்கத் தொடங்கினாள்.

"வழக்கமாக அப்பா இரவு வேளைகளில் எங்கேயாவது சிறிது உலாவிவிட்டுத்தான் வருவார். ஆனால் கடந்த மூன்று நாட்களாக அவர் எங்கும் வெளியிலே செல்லவில்லை. நேற்றிரவு நானும் அண்ணன் சோமுவும் படம் பார்க்கச் சென்றுவிட்டு வீடு திரும்பினோம். மேல்மாடிக்குச் சென்று அப்பாவிடம் படத்தைப்பற்றிக் கூறப் போனேன். ஆனால் வழக்கத்துக்கு மாறாக அப்பாவின் அறைக்கதவு மூடப்பட்டிருந்ததால், அவர் எங்கேயும் போயிருக்கலாம் என்று எண்ணி நான் எனது அறைக்குச் சென்றுவிட்டேன். சில வேளைகளில் அப்பா நேரம் கழித்து வருவதால் நேற்றிரவு அவரின் அறைக்கதவு சாத்தப்பட்டிருந்தது குறித்து தப்பாகவோ அல்லது அசாதாரணமாகவோ நான் ஒன்றும் நினைக்கவில்லை. அப்பா நித்திரையாகியிருப்பார். கரைச்சல்படுத்தக்கூடாது என்று நினைத்துபடுக்கச் சென்றுவிட்டேன். விடிந்ததும் அதாவது இன்றுகாலை அப்பாவுக்கு கோப்பி கொடுப்பதற்காக அவரின் அறைக்குச் சென்றேன். ஆனால் நான்சற்றும் எதிர்பார்க்காதமாதிரி அப்பாவின் அறைக்கதவு சாத்தப்பட்டுத்தானிருந்தது. ஆனால் திறப்பாலோ அல்லது பூட்டுகளாலோ பூட்டப்பட்டிருக்கவில்லை. "அப்பா......அப்பா" என்று கூறி இரண்டு தடவைகள் அறைக்கதவைத் தட்டினேன். ஆனால் அறைக்குள்ளிருந்து எந்தவித சத்தமும் வெளிவரவில்லை. "அப்பா இன்னுமா இப்படித் தூங்குகிறார்..." என்று நினைத்த நான் உடனே அண்ணனின் அறைக்குச் சென்றேன். சோமு அண்ணன் அப்பொழுதுதான்சோம்பலை முறித்துக் கொண்டு படுக்கையைவிட்டு எழும்பிக்கொண்டிருந்தார். அப்பாவின் அறைக்கதவு மூடப்பட்டிருப்பதுபற்றியும் அப்பா எழுந்திராதது குறித்தும் அண்ணனிடம் நான் சொன்னேன். பின்னர் நானும் அண்ணனும் அப்பாவின் அறையை நோக்கிச் சென்று கதவைத் தட்டினோம். மெதுவாக அறைக் கதவைத் தள்ளிப் பார்த்தோம். இருகதவுகளும் படீர் என்று திறந்தது. அங்கு... அப்பா கட்டிலில் நித்திரை செய்து கொண்டிருந்தார். "அப்பா நல்ல நித்திரை தான் கொள்கிறார்" என்று வாய்விட்டுக் கூறிய நான் அப்பாவை எழுப்பினேன். ஆனால் அவரிடமிருந்து எந்தவித பதிலுமில்லை. சிறிதுபயந்துபோன நான்... "அப்பா...... அப்பா" என்று அவரை உலுப்பினேன் ஆனால்...என்று கூறிமுடிப்பதற்குள்ளே தேவிகா மீண்டும் விக்கி விக்கி அழத் தொடங்கினாள். ஆறுதல் வார்த்தைகளைக் கூறி தேவிகாவை சிறிது சமாதானப்படுத்திவிட்டு மேலும் சில கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார் பொலிஸ் இன்ஸ்பெக்டர்பிரான்சிஸ்.

"அப்பாவின் அறைக்கு முதலில் கோப்பியுடன் வரும்சமயம் என்ன மணியிருக்கும்?—" காலை சுமார் ஆறு மணியிருக்கும்.

"அப்பாவுக்கு நீங்கள்தான் கோப்பி கொடுப்பீர்களோ?"— "ஆமா இன்ஸ்பெக்டர். வழக்கமாக தினமும் காலையில்நான்தான் அப்பாவுக்கு கோப்பி கொடுப்பேன்."

"நீங்கள் படத்துக்குச் செல்லும்போது என்ன மணியிருக்கும்? திரும்பிவரும்பொழுது எத்தனை மணியிருக்கும்?"

"வீட்டைவிட்டுப் புறப்படும்பொழுது சுமார் ஆறு மணியிருக்கும். படம்பார்த்துவிட்டு வீடு திருமபும்பொழுது இரவு பத்துமணியிருக்கும்."

"நேற்று யாராவது வீட்டுக்கு வந்தார்களா...? சிறிது யோசித்துப் பாருங்கள்......"

"நேற்று... அப்படிக் குறிப்பாக யாருமே வரவில்லை இன்ஸ்பெக்டர். ம்... ஆமா... ஆமா ஒருவர் வந்தார். அவரை எனக்கு முன்பின் ஞாபகமில்லை...பார்த்ததும் கிடையாது. அவர் வந்து "அப்பா இருக்கிறாரா?" என்று கேட்டார். நான் 'ஆம்' என்றேன். நேராக அப்பாவின் அறைக்குச் சென்று அவருடன் கதைத்துக் கொண்டிருந்தார்."

"அந்த மனிதர் வரும்பொழுது இங்கு வேறு யாருமே இருக்கவில்லையா?"

"இல்லை இன்ஸ்பெக்டர். நான் மட்டும்தான் இருந்தேன். வேலைக்காரர்களும் அப்பொழுது வீட்டில் இருக்கவில்லை. 'கார் டிரைவர்' மாணிக்கம் அவரது அறையில் இருந்தார்."

"அப்பொழுது என்ன மணியிருக்கும்?"

"காலை சுமார் பத்துமணி இருக்கும்."

ஒருசில நிமிடங்கள் மறைந்ததும் இன்ஸ்பெக்டரின் பார்வை இறந்துபோன சங்கரலிங்கத்தின் வளர்ப்புமகன் சோமன்மீது திரும்பியது! "நீங்கள் நேற்று எங்கு சென்றிருந்தீர்கள்?"

"நேற்றுக்காலையில் முக்கிய அலுவலாக நான் வல்வெட்டித்துறைக்குச் சென்றிருந்தேன். அந்த முக்கிய அலுவல் வேறு ஒன்றுமில்லை இன்ஸ்பெக்டர். எனது நண்பன் ஒருவனின் திருமணம் நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு நடைபெற்றது. இங்கிருந்து காலை எட்டுமணிக்கு காரில் புறப்பட்டுச் சென்ற நான் பிற்பகல் ஒரு மணிக்குத்தான் வீட்டுக்கு வந்தேன். நான் வந்தபொழுது அப்பா இங்கிருந்தார். அவரிடம் கூறிவிட்டுத்தான் நான் நண்பனின் திருமணத்துக்குச் சென்றிருந்தேன்." என்றான் சோமன்.

ஒரு கேள்வி கேட்டதற்கே முழுவிபரத்தையும் தெரிவித்த சோமனின் அறிவுத்திறனைக் கண்டு மகிழ்ச்சியடைந்த இன்ஸ்பெக்டர் சோமனிடம் அடுத்த கேள்வியைக் கேட்கு முன்னரே... "இன்ஸ்பெக்டர் என்று அழைத்தார்" மரணவிசாரணை அதிகாரி. அந்த நேரத்தில் சுமார் ஐந்தரை அடி உயரமுள்ள ஒரு மனிதர் அந்த அறைக்குள் நுழைந்தார். அவரின் முகம் விகாரமாகக் காட்சியளித்தது. சிறிது அழுக்கடைந்தஷேர்ட்... கலங்கியகண்கள் ...அங்குமிங்கும் பரவிக்கிடந்த தலைமுடி. இந்தக்காட்சிகள் ...அவர் எதையோ பறிகொடுத்துவிட்ட உணர்ச்சியை வெளிப்படுத்தியது. அந்த மனிதர் அறைக்குள் நுழைந்த அதேசமயத்தில்...

"இன்ஸ்பெக்டர்... இவர்தான் நேற்றுக்காலை இங்கு வந்தார். அப்பாவுடன் கதைத்ததும் இவர்தான்..." என்று ஆவேசமாகக் கூறினாள் தேவிகா!

(தொடரும்)

மகாயுத்தத்தின்போது சிலபயங்கர அனுபவங்கள்

-கோண்டாவில் ஆர். ஜெயப-

உலக யுத்தமொன்று ஏற்படுவதென்றால் அது சாதாரணமான விஷயமல்ல. உலக யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனால் உண்டாகும் அழிவுகள் எண்ணிலடங்கமாட்டாது என்பது நமக்குத் தெரியும்.

கடந்தகால சரித்திரச் சம்பவங்களைப் பார்க்கும்பொழுது, பழைய ஏடுகளைப் புரட்டும்பொழுது, உலகில் ஏற்பட்ட பல யுத்தங்களை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அரசர்களுக்கு ஏற்பட்ட சண்டைகளையும், எல்லைகளையும், நாடுகளையும் தம் வசமாக்கிக் கொள்வதற்காகப் பல நாட்டுத் தலைவர்களால் ஆரம்பித்த யுத்தங்களையும், இதனால் உண்டான விளைவுகளையும் நாம் கடந்தகால சம்பவங்களின் கோர்வைகளில் இருந்து நன்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

உலக யுத்தமொன்று ஏற்பட்ட சமயத்தில், உயிரின் விலையை அறியாமல்ஒருக்ஷணப் பொழுதில் உயிர் எனதுஉடலை விட்டுப் பிரியலாம் என்ற பீதியில் நான் வாழ்ந்தபொழுதுபல பயங்கரமான திகில் மிகுந்த அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டுள்ளன. அது எப்பொழுது தெரியுமா...?

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போதுதான்!

★

ஆண்டு 1941. மாதம் செப்டம்பர். திகதி: 8 உலக மகா யுத்தம் ஆரம்பமான அந்தச் சோகதினம் இது! இந்த இக்கட்டான சமயத்தில் நானும் எனது அம்மாவும் அப்பாவும் சிங்கப்பூரில் ஈப்போவில் இருந்தோம். ஓ... எங்களைப் பற்றி உங்களுக்கு அறிமுகப் படுத்தவில்லையே என்று நினைக்கிறீர்களா? நாங்கள் இலங்கைத் தமிழர்கள்; ஊர்: யாழ்ப்பாணம்.

யுத்தமொன்று ஏற்படப் போகிறது என்று எங்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்தார்கள். யுத்த சமயத்தில் நாங்கள் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்றும் உயிரை எந்தவிதத்தில் பாதுகாத்துக்கொள்ளலாம் என்றும் எங்களுக்குச் சொல்லிக்கொடுத்திருந்தார்கள். இதெல்லாம்... யுத்தம் நடக்கும் சமயத்தில் எம்மாத்திரம்!

பயங்கர யுத்தம் ஆரம்பமாகிவிட்டது! குண்டுகள் மாரி பொழிந்தவண்ணம் இருந்தன. முன்பின் அனுபவமிருந்தால்தானே எமக்குப் பயமில்லாமல் இருக்கும். நூறு இருநூறு மைல் தூரத்தில் விழும் குண்டுகளின் பயங்கர ஒலிகள்—கட்டிடங்கள், கோட்டைகள் இடிந்துவிழும் சத்தங்கள் எங்களின் காதுகளைப் பிளந்து கொண்டிருந்தன.

நாங்கள் இருந்த இடத்துக்குச் சமீபத்தில்கூட குண்டுகள் விழ ஆரம்பித்துவிட்டன. ஜப்பானியர்களின் குண்டு விமானங்கள் எல்லாம் சுமார் எழுபது—எண்பது அடி உயரத்தில் பறந்து சென்றுகொண்டிருந்தன. எங்களின் வீட்டுக்கு மேலாக அந்த விமானங்கள் பறந்துசெல்லும் சமயத்தில் நாங்கள் வேண்டாத தெய்வமில்லை! செய்யாத நேர்த்திக்கடனில்லை! ஜப்பானியர்களின் விமானங்கள் அதிகமாகக் காலையில்தான் பறந்து செல்லும். இதோ ஒருசில அனுபவங்கள்.

ஜப்பானியர்கள் எங்களின் வீட்டுக்கு, (பொதுவாக எல்லா வீடுகளுக்கும்) வந்தால் அவர்கள் வருவதற்கு முன்னரே ஒருவித நாற்றம் மூக்கைத் துளைக்கும்! சேற்றிலும், சகதியிலும், பிணங்களின் மீதும் அவர்கள் நடந்து சென்றதால் ஜப்பானியர்களின் உடலே ஒருவித நாற்றத்தால் பீடித்துக்கொண்டது. அவர்கள் அணியும் சட்டைகளை மாதக்கணக்கில் போட்டிருப்பார்கள். வீடுகளுக்கு வந்தால் எங்கள் வீட்டில் நல்ல ஷேர்ட்டுகள் இருந்தால் அவற்றை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். நல்ல ஷேர்ட்டுகள் அணிந்திருந்தால் கூட, அவற்றைக் கழற்றச் சொல்லி எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். இதன் காரணமாக நாங்கள் நல்ல ஷேர்ட்டுகளையோ அல்லது உடுப்புகளையோ அணிவதேயில்லை. ஓரளவு துவைத்து 'ஸ்திரிக்கை' போட்ட ஷேர்ட்டுகளை அணிய நேரிட்டால் கூட, அவற்றை ஒருவகையாகக் கிழித்து சும்மா வேண்டுமென்று தைத்துவைத்திருப்போம். ஜப்பானியர்கள் அதைப் பார்த்து ஏமாறி, 'கிழிந்த ஷேர்ட்டுத் தானே' என்று எண்ணிப் போய்விடுவார்கள். இந்தவகையில் நாங்கள் ஜப்பானியர்களைக் கூட ஏமாற்றிவிட்டோம், பார்த்தீர்களா!

ஜப்பானியர்களுக்கு இளநீர் என்றால் மிகவும் பிரியம். ஆனால் அவர்களுக்கு மரத்தில் ஏறத் தெரியாது. இளநீர் பருகுவதற்காக அவர்கள் எங்கள் வீட்டு மரத்தையே வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள் என்றால் பாருங்களேன்! இந்த வகையில் எத்தனையோ தென்னை மரங்கள் 'உயிரிழந்து' சாய்ந்து விழுந்து கிடந்தன! ஜப்பானியர்களுக்கு நகைகள் மீதும் அதிக விருப்பமிருந்தது. நகைகளைவிட்டு வீட்டிலுள்ள சகல விநோத பொருள்கள்மீதுகூட அவர்களுக்கு விருப்பம் இருந்தது. மோதிரம் அணிந்திருந்தால் அவற்றை கேட்டு வாங்கிச் செல்லமாட்டார்கள். மோதிரத்தை எடுப்பதற்காக கையின் விரலைக்கூட நறுக்கி எடுத்துவிடுவார்கள். இந்த வகையில் எங்களுக்குத் தெரிந்த பலரின் கைகளில் பல விரல்கள் காணாமற்போயிருந்தன! ஆனால் யார் செய்த புண்ணியமோ எங்களின் விரல்கள் மிகவும் பத்திரமாகவேயிருந்தன. ஆனால் பொருள்கள்....? பொருள்களைவிட உயிர்தானே முக்கியம்!

சந்திகளிலும், தெருவின் ஓரங்களிலும் சில தார்ப் பீப்பாய்கள் இருக்கும். அந்தப் பீப்பாயின்மீது சீனரின் தலைமட்டும் தொங்கிக்கொண்டிருக்கும்! இது ஏன்? விளக்கம் அடுத்த இதழில் கூறுகின்றேன்.

(அடுத்த இதழில் முடியும்)

மூளைக்கு வேலை

இந்தப் பகுதியில் நாம் கேட்ட கேள்விக்கு சரியான விடையனுப்பியவர்களின் பெயர்கள் வருமாறு: இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்கள்.

ஜெயந்தினி கருமரத்தினம், மானிப்பாய்; செல்லையா, பெரியதெரு, நெடுந்தீவு; உ. ஈஸ்வரலிங்கம், கொண்டல் கட்டை, வல்வெட்டித்துறை; ச. ஸ்ரீத்ரஞ்சினி, தொண்டைமானாறு; அ. செல்வரத்தினம், சுழிபுரம்; சந்திரா நல்லையா, யாழ்ப்பாணம்; க. மயில்வாகனம், கைதடி; த. இரத்தினம், புங்குடுதீவு; மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு; ந. சிவஞானகந்தாம், மானிப்பாய்; எஸ். வி. சிங்கம், மாவிட்டபுரம்; சி. இந்திராணியம்மா, தாமரைக்குளத்தடி, சரவெட்டி; சி. நித்தியானந்தன், யாழ்ப்பர்ணம்; ஐ. முருகையா, சூராவத்தை; மு. சிவபாதம், தட்டாதெரு, பருத்தித்துறை; தா. சிவசம்பு, மல்லாகம்; ச. கணேசலிங்கம், பொலிகண்டி; இ. பரிமேல் அழகன், கொட்டடி, யாழ்ப்பாணம்; க. கௌரிதேவி, நீவியம்பனை, மல்லாகம்; இ. ஸ்ரீரவீந்திரராசா, நல்லூர்; த. இரத்தினம், ஓமந்தை; மு. குமரேந்திரன், சொக்குவில்; பெ. சிவகுருநாதன், காங்கேசன்துறை; மு. விமலகுமாரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்; க. சொர்ணம்பிகை, காரைநகர்; வெ. சக்திவடிவேல், வல்வெட்டித்துறை; டி. ரத்தினம், புங்குடுதீவு; இ. ஜெகதீசன், வட்டுக்கோட்டை; ஞா. எட்வேட் ஆர். அமிர்தநாயகம், பி. அந்தோனிப்பிள்ளை. ஜே. எம். தேவதாசன், நெடுந்தீவு.

கேள்வி எங்கே என்றுதானே கேட்கின்றீர்கள்? இன்னும் ஏழு நாட்கள்வரை பொறுத்திருங்கள்.

—சாந்தா

சந்தேக நபர்கள் பிணையில் செல்ல அனுமதி

கொழும்புத்துறை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், செவ். கொழும்புத்துறை கொலை வழக்கில் சந்தேகநபர்களான மூன்று சகோதரர்கள் கந்தையா இராசரத்தினம், கந்தையா ஜெயரத்தினம், கந்தையா யோகரத்தினம் ஆகியோரை யாழ்ப்பாணம் மஜிஸ்டிரேட் திரு. டபிள்யு. அரசவேலன் தலா ரூ 10,000 பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

இம்மூவரும் அவர்களின் சிறிய தந்தையான ஜோசேப்பு செல்வரத்தினம் என்பவரைப் பண்டியந்தாள்வில் 24-12-63 இரவு கொலை செய்தனரென்ற சந்தேகத்தின் பேரில் இன்ஸ்பெக்டர் கனகசிங்கத்தின் விண்ணப்பத்திற்கிணங்க 27-12-63 திகதியிலிருந்து ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர். பிரதான சாட்சியான கார்சார்தி பொலிஸாருக்குக் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரணான சாட்சியம் கோர்ட்டில் அளித்ததைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் அச்சாட்சியும் எதிரியாகக் கணிக்கப்படவேண்டியவராதலால் அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனையைப் பெறுவதற்கு அவகாசம் கொடுக்கும்படி கேட்டதைத் தொடர்ந்து இரு தவணைகள் கொடுக்கப்பட்டிருந்தது. அவகாசம் கொடுக்கும் படி இன்ஸ்பெக்டர் மீண்டும் மாஜிஸ்டிரேட்டிடம் சென்ற சனிக்கிழமை விண்ணப்பித்தார்.

குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய போதியளவு காலம் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையுமில்லாது இந்நாட்டின் பிரஜைகளை சுயாதீனமாக நடக்க விடாது பொலிஸார் இவ்விதம் அடைத்து வைத்திருப்பது நீதியீனமானது என்று வழக்கறிஞர் கூறினர்.

இவ்விதமான கொலை வழக்குகளில் சந்தேக நபர்களுக்குப் பிணை கொடுப்பது தவறென இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் சுட்டிக்காட்டினர்.

சென்ற முறை தவணை கொடுத்த பொழுது அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனை பெறுவதற்குக் கடைசித் திகதியாக தவணை கொடுத்திருந்ததாக கூறிச் சந்தேக நபர்களை தலா ரூ 10000 பிணையில் செல்லுமெனவும் 29-2-64-ந் திகதி கோர்ட்டில் ஆஜராக வேண்டுமெனவும் மஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

இன்ஸ்பெக்டர் கனகசிங்கம் வழக்கைத் தாக்கல் செய்தார். எதிரிகள் சார்பில் திரு. ஆர் விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானார்.

புதிய தலைவர்

ஊர்காவற்றுறை, திங்கள் ஊர்காவற்றுறை பட்டினசபையின் புதிய தலைவராகத் திரு ஐயாத்துரை சென்ற சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது தெரிவின் பிரகாரம் பெரும்பான்மை அங்கத்தவர்கள் செய்து கொண்ட கனவான் ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டது. ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட இப்பட்டினசபையின் மூன்று அங்கத்தவர்கள் மாத்திரம் பிரஸ்தாபகூட்டத்தில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வானொலிநிகழ்ச்சிகள்

செவ்வாய் 11-2-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 சேர்ந்திசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 அரங்கு

இரவு 6-30 கிராமசஞ்சிகை 7-00 [illegible] 7-30 'திரை கடந்த இசை' — சித்திரம், 8-00 மாணவர் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம் — பி. கோவிந்தராசா.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00. இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை. 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்தியக் கோஷ்டி, 7-30 கோபாலகிருஷ்ண பாரதியார் — பாடல்கள், 7-45 ரேடியோ செய்தி மலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 இசைக்கோவை, 2-40 பொன்னொளிர் பாரதம் — தொடர்நிகழ்ச்சி.

மாலை 5-15 தென்காசி கே. எம். ராஜா — புல்லாங்குழல், 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 அற்புத உவமைகள், 7-45 சுலோசனா பட்டாபிராமன் — பாட்டு, 9-15 நாட்டுப்பாடல்கள், 9-30 கண்ணன் கல்யாணம் — சிறுகதை, 9-45 அருட்பா, 10-00 தென்காசி கே. எம். ராஜா — புல்லாங்குழல்.

கண்டாவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கண்டாவளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நெல் அளப்பதற்கும் ஏற்றுவதற்கும் கேள்விப் பத்திரம்.

i. இச்சங்கக் காரியாலயத்தில் இருந்து லொறி மூலம் பரந்தன் அரசினர் நெற் களஞ்சியத்திற்கு 80 மூடை வீதம் ஏற்றி இறக்க......?

ii. ஒவ்வொரு மூடை அளந்து, கட்டி, அடுக்கிப்போட...?

கேள்விப் பத்திரங்கள் 15-2-64 க்கு முன் பதிவுத் தபால் மூலம் சங்கக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வ. இளையதம்பி
(காரியதரிசி).

கண்டாவளை
10-2-64 1786

சனசமூகநிலையத்தில் திருட்டு

அல்லைப்பிட்டி, திங்கள் அல்லைப்பிட்டி வாகீசர் சனசமூக நிலையத்தில் சென்ற இரு தினங்களுக்கு முன் வானொலி ஒன்று திருட்டுப்போயுள்ளது. இந்த வானொலிப் பெட்டி பொதுமக்களின் பணத்தில் கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன் வாங்கியதாகவும் தெரிகிறது.

அத்துடன் அந்த வானொலிப் பெட்டியோடு தொடர்பு வைத்து நிகழ்ச்சிகளைக் கேட்கும் ஒலிபெருக்கி ஒன்றும், பாட்டரி ஒன்றும் களவாடப்பட்டுள்ளது.

விசாரணைக் கமிஷன் முன் 90 சாட்சிகள்

கொழும்பு, திங்கள் நாளை ஆரம்பமாகவிருக்கும் பண்டாரநாயக்கா கொலை பற்றிய கமிஷன் விசாரணையில் 90 சாட்சிகள் வாக்குமூலமளிப்பர்.

திரு. டபிள்யு. தஹநாயக்கா, ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன, திரு. லயனல் குணதிலகா, டிக்கி டி' சொய்ஸா ஆகியோர் ஏற்கனவே கடந்த சனிக்கிழமை கமிஷன் முன் ஆஜராகினர்.

முன்னாள் சுகாதார மந்திரி ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன தமது வழக்கறிஞர் திரு. வி. எஸ். பாலகுமாரகுலசிங்கத்துடன் ஆஜரானார்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையிலே சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு பூர்த்திவிழா மிக விசேஷமாக நடந்தது. அதில் கலந்துகொள்ளக் கொழும்பிலிருந்து சென்ற சுவாமி பிரேமாத்மானந்தா [illegible] சுகவீனமேற்பட்டு [illegible] தர்மசத்திர [illegible] சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. அவர் சீக்கிரம் குணமடைந்து திரும்ப வேண்டுமென்பது பலரது பிரார்த்தனை.

* * *

வண்ணை வி. எஸ். எஸ். பண்பாகவதர், தமது 45-வது பிறந்த தினத்தை முன்னிட்டு கோலாலம்பூரில் ஸ்ரீகந்தசுவாமி கோவிலில் சென்ற 9-ந் திகதி ஞாயிறன்று "வாக்கிற் அருணகிரி" எனும் பொருள்பற்றி சொற்பிரசங்கம் செய்தார். மார்ச் மாதக்கடைசியில் அவர் இலங்கை திரும்பலாமென்று தெரிகிறது.

*

சடையனும் நாமந் தனக்கே
யுடையவன் செம்மேனி எம்மான்
அடலேறு ஊர்தி கொண்ட
வெந்தத்துமாகில் அவன் நனை
யான்
டலேனும் நாமம் பிடித்துத்
[illegible] உளமழைத்தால்
இடமில்லை [illegible]
அலமுட்டி பெரியானென்
நெதற்பட்டுமே

— திருநாவுக்கரசர்

[illegible]

தொய்வு, நீரிழிவு

[illegible] உத்தரவாதம் [illegible] அரசியற் பிரமுகர் [illegible] சிகிச்சை பெற்ற [illegible] அடங்கிய [illegible] இலவசம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் [illegible] பரிபூரணானந்த [illegible] கோவில் [illegible] யாழ்ப்பாணம்.

தேவை

சைவ சமையல்காரர்: காந்தி நிலையம் மாணவர் இல்லத்துக்கு உடனே தேவை. மனேஜர், காந்திநிலையம், உருத்திரபுரம், பரந்தன். 1939

விற்பனைக்கு

1 ஸ்ரீ பி. எஸ். ஏ. பன்ரம் மேஜா விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு: ஆ. சிவசம்பு, சைக்கிள் கடை (பஸ் நிலையத்திற்கு முன்பாக), சுன்னாகம். 1940

காணாமல் போயிற்று

3-2-64 திங்கட்கிழமை பகல் 1 மணியளவில் பெரியகடை பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட பஸ்ஸில் முக்கியமான உறுதிப்பத்திரங்கள், நோட்டுகள், மூக்குக்கண்ணாடி முதலியன உள்ள தோளில் மாட்டும் கன்வஸ் பை தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் ஆஸ்பத்திரி வீதி, வை. சி. இ. ந. தேநீர்க் கடையில் கொடுத்தால் தகுந்த பரிசு வழங்கப்படும். 1941

THE COLLEGE OF HIGHER STUDIES JAFFNA

(approved under the Education Ordinance as an Senior Secondary School)

எமது கல்லூரிமூலம் ஓராண்டில் மாணவிகட்கு மனையியலிலும் தையற்கலையிலும் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்புவோர் பின்வரும் விலாசத்திற்கு மனுப்பண்ணவும். பதிவாளர், உயர்கலைக்கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1942

தேவை

உள் நாட்டுத் தயாரிப்புகளை ஊக்கத்துடன் விற்பனை செய்யச் சயிக்கிளுள்ள வாலிபர்கள் தேவை. பிணைப்பணம் ரூபா 250/- விபரம் நேரில், இ. கந்தசாமி, 123/3, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 1948

இடைத்தேர்தல் முடிவு

ஊர்காவற்றுறை, திங்கள் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற நெடுந்தீவு நாலாம் வட்டார இடைத்தேர்தலில் திரு. குமாரசாமி வெற்றி பெற்றுள்ளார். தமிழரசுக்கட்சி ஆதரவாளரான இவருடன் தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளரான திருமதி கதிரேசு போட்டியிட்டார்.

ராஜ்குமார் விஜயம்

யாழ்ப்பாணம், செவ்வாய் இந்திய ஹைகமிஷனர் காரியாலயத்தைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

13-ம் திகதி நடைபெற்ற வருடாந்தவிழாவிற்கு திரு. ராஜ்குமார் தலைமைவகிப்பார். 11-ம், 12-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை-இந்தியர் சம்பந்தமாக விசாரணை நடத்துவார். யாழ்ப்பாணம் வர தீர்மானித்திருந்த ஹைகமிஷனர் திரு. [illegible] கடைசிநேரத்தில் தமது விஜயத்தை ரத்துச்செய்தார்.

உங்கள்
குழந்தைக்கு
உயிர் ஈந்தவர்
நீங்கள்

இப்போது சுகம்,பெலன்,சந்தோஷம் இவற்றையும் அளியுங்கள்

சின்னஞ் சிறு சிசு தனக்கு வேண்டிய சக்தியை பிறக்கு முன்பே தன் தாயிடமிருந்து பெற்றுக்கொள்கிறது.

ஆனால் வளரும்போதோ அந்த சிறு உடம்பின் வளர்ச்சிக்கு அநேக விட்டமின் சத்துகள் தேவைபடுகின்றன. சுக வளர்ச்சிக்கும், சிறந்த கண்பார்வைக்கும் விட்டமின் A, உறுதியான எலும்புகளுக்கும், பற்களுக்கும் விட்டமின் D, நிடமான உடம்பிற்கும், மாசற்ற சருமத்திற்கும் விட்டமின் C தேவைப்படுகின்றன.

இவ்விட்டமின்கள் அனைத்தையும் உங்கள் குழந்தை பெறுகிறது என்று நீங்கள் எப்படி நிச்சயிக்கக்கூடும்?

மீன் எண்ணெயும், தோடம்பழச்சாறும் இவ்விட்டமின் சத்துகள் அடங்கியவைதான். ஆனால் மீன் எண்ணெயின் பிசுபிசுதன்மையின் காரணமாக குழந்தைகளுக்கு அதை ஊட்டுவது எளிதல்ல. மேலும் சில வேளைகளில் மீன் வாடை கொண்ட ஏப்பம் வரக்கூடுமானதால் அநேக குழந்தைகள் இதை உட்கொள்ள விரும்பமாட்டார்கள். ஹலிபோரேஞ் உட்கொள்வதில் இச்சங்கடங்கள் ஏற்படுவதில்லை. குழந்தையின் சுக வளர்ச்சிக்கு வேண்டிய A, D, C விட்டமின் சத்துகள் அனைத்தும் அதில் அடங்கியுள்ளன. அது ருசி மிக்கது. (சாதாரண தோடம்பழத்தை விட இனிப்பானது.) மீன் வாடை அல்லது மீன் சுவை அதில் இல்லை. சிசுகளும், சிறு குழந்தைகளும் ஹலிபோரேஞ்சை அதிகம் விரும்புகிறார்கள்.

இளம் பிராயத்தின் ஆரோக்கியத்திற்கு

ஹலிபோரேஞ்

[illegible]வே சக்தி மிகுந்த வளர்ச்சிக்கு ஏற்றது

Haliborange
Allen & Hanburys Ltd
London

இதோ
இளச்சேவை
அலன்பரீஸ்
உற்பத்தி.

யுதாண்ட், எலிஸபெத் ராணிக்கு தேரோ கடிதம்

இந்தியப் பிரச்னையைத் தீர்த்துவைக்க வேண்டுகோள்

பண்டாரவளை, திங்கள்

புழுதோட்டை குகைச கோவிலைச் சேர்ந்த அம்பலாங்கொடை அத்ததாஸி தேரோ இலங்கை-இந்தியப் பிரச்னையைத் தீர்த்துவைக்குமாறு எலிஸபெத் மகாராணிக்கும், ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு தாண்டுக்கும் பகிரங்கக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

இதற்கு முன் இந்தியப் பிரதமர் நேருவுக்கு அவர் இவ்வாறு இரு விண்ணப்பங்கள் விடுத்தார்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும் இலங்கை-இந்தியப் பிரச்னை சிங்கள நாட்டுக்கு பெரும் அபாயமாய் விளங்குகிறதென்றும், இந்தியப் பிரதம மந்திரி பல்வேறு சந்தர்ப்பங்களில் சமானத் தீர்வு பற்றிப் பேசிய போதிலும் உபயோககரமான முறையில் எதுவும் செய்யவில்லை என்றும் அவர் தமது விண்ணப்பத்தில் கூறியிருக்கிறார். அதுமட்டுமின்றி இந்தியர் எவரையும் திருப்பியழைத்துக்கொள்ளவும் நேரு மறுத்துவருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் போக்கு மனிதாபிமானமற்றதென்றும், மனித உரிமையை மீறும் செயல் என்றும் கூறியுள்ள தேரோ, பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் சட்டவிரோத குடியேற்றம் அதிகரிக்குமென்றும், இதன் மூலம் சிங்கள மக்கள் தங்கள் சொந்த நாட்டிலும் கூட அமைதியாக வாழ முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இவ்விஷம் பற்றி இந்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, விரைவில்சுமுகமான தீர்வுகாண உதவும்படி அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மண்டைதீவில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னார் என்றாலும் அவர் இறந்துவிட்டார்.

இந்தக் கூச்சலைக் கேட்டதும் அங்கு ஓடிவந்த அண்ணர் வரத்சிங்கம் கீழே விழுந்து கிடந்த கிருமிநாசினித் தகரத்தை எடுத்துக்கொண்டு வீட்டின் பின்புறம் ஓடினார். இச்சமயம் இராசரத்தினம் என்பவர் அவரைத் தொடர்ந்து சென்று தகரத்தைப் பறித்து எறிந்து வீசியபோதிலும் அண்ணன் அதற்குள் அதைக் குடித்துவிட்டதால் விழுந்து இறந்தார்.

இறந்தவர்களின் தந்தையார் ஆறுமுகம் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:

எனது மகள் ஒரு ஆட்டுக்குட்டியை அன்பாக வளர்த்து வந்தார். அந்த ஆட்டுக்குட்டிக்கு சென்ற சனிக்கிழமை யாரோ கல்லால் எறிந்துவிட்டனர். இதையிட்டு அவர் கவலை கொண்டிருந்தார். இரவு வெகு நேரமாக அழுதுகொண்டிருந்தார்.

எங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் சாமர்த்தியச் சடங்கு நடைபெற்றது. அதைப்போல் தனக்கும் சிறப்பாக ஏன் சடங்கு செய்யவில்லை என்று அவர் கேட்டார். "என்னிடம் ஏன் கேட்கிறாய்? உன் அண்ணன்மாரிடம் போய்க் கேள்" என்று நான் பதில் சொன்னேன்.

விசாரணை முடிவில் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

புதிய கிராமசபை தேர்தல்கள்

ஏப்ரலில் நடைபெறும்

நல்லூர், திங்கள்

வடபகுதியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் ஐந்து புதிய கிராம சபைகளுக்குமான தேர்தல்கள் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் நடைபெறுமெனத் தெரிகிறது.

நீர்வேலி, மல்லாகம், தீவுப்பகுதி ஆகிய இடங்களில் உள்ள கிராம சபைகளிலிருந்து பல வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு இப் புதிய கிராம சபைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

புதிதாக அமைக்கப்பட்ட இக் கிராம சபைகள் சம்பந்தமாக பொது மக்களிடம் அபிப்பிராயங்கள் கோரப்பட்டுள்ளன. வட்டார அமைப்பு முறைகள் பற்றியும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதியும் விரைவில் உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காரியதரிசியின் சம்பளம்

பட்டினசபை தீர்மானம்

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை பட்டின சபையில் மின்சார சுப்பிரண்டன்ட்டாக கடமையாற்றும் திரு ச. முத்தையாவை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்குவதுடன் உடனடியாக மாற்றம் செய்யவேண்டும் என்ற தீர்மானம் பட்டினசபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பட்டினசபையின் விசேஷ கூட்டம் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் சபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் பட்டினசபை உபதலைவர் திரு. க. கிருபாமூர்த்தி கிளப்பிய மூன்று ஆட்சேபனை வாக்களிகளும் ப்புக்கு விடப்பட்டு 4-2 வாக்குகளால் தோல்வியடைந்தது.

பட்டினசபை புதிதாக அமைத்துள்ள வாசிகசாலையை மார்ச் மாதத்தில் திறந்து வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிங்களக் காரியதரிசிக்குப் பட்டினசபை சம்பளம் வழங்குவது பட்டினசபை நடத்திய போராட்டத்திற்கு மாறானதாக அமையுமாதலால் வேறு வழியில் பணத்தைப் பெற்று சிங்களக் காரியதரிசிக்கு சம்பளம் வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சிரமதான மூலம் சிலதிட்டம் நிறைவேறும்

அரசாங்கத்தின் நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

ஒவ்வொரு இலாகா சிரமதான வேலைமூலம் சில திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குளங்கள் திருத்துதல் வீதிகள், மலசல கூடங்கள் அமைத்தல் ஆகிய வேலைகளையும் விவசாயததுறையில் களைபிடுங்குதல் போன்ற வேலைகளையும் சிரமதானம் மூலம் செய்விக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இவற்றைக் கவனிக்க ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள், எம். பி. க்கள். செனட்டர்கள் ஆகியோரைக் கொண்டகுழு ஒன்று இயங்குமென அறியப்படுகிறது.

பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், இராணுவம், அரசாங்க கூட்டு ஸ்தாபனங்கள் ஆகியன இந்த சிரமதானத்தில் பங்கு கொள்ளும்.

இந்திய பார்லிமெண்ட்

புதுடில்லி, பெப். 10

பார்லிமெண்டின் இரு சபைகளையும் சேர்ந்த கலப்புக்கூட்டத்தை ஜனாதிபதியின் சார்பாக, உப ஜனாதிபதி டாக்டர் ஸகீர்ஹூசெய்ன் ஆரம்பித்து வைத்தார். பிரதம மந்திரியும் அப்போது சமூகமளித்திருந்தார். பின் இரு சபைகளும் தனித்தனியாகக் கூடி காலஞ்சென்ற ராஜ்குமாரி அமிர்த கௌரிக்கு மௌனாஞ்சலி செலுத்தியது.

உப-ராஷ்டிரபதி தமது உரையை ஹிந்தியில் நிகழ்த்தினார். இதறகு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் தி. மு. க. அங்கத்தவர்கள் எவரும் சபைக் கூட்டத்தில் இன்று கலந்து கொள்ளவில்லை.

ரூ. 50 அபராதம்

கிராம சேவகரைப் பயமுறுத்தினாராம்

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணைப் பகுதியைச் சேர்ந்த மண்கும்பான் வாசியான இராமலிங்கம் அரியபுத்திரர் என்பவருக்கு அல்லைப்பிட்டி கிராமசேவகர் திரு கே. தளையசிங்கத்தைப் பயமுறுத்தியதோடு தூசித்து ஏசிய குற்றத்திற்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிபதி திரு. அரசவால்டன் ரூபா 50 அபராதம் விதித்தார்.

எதிரியின் மகள் திருமதி இராசையா நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் தனது தந்தையாகிய எதிரி, கிராம சேவகரைத் தூசித்தார் என்று கூறினார்.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு அபராதம் விதித்ததோடு கோர்ட் கலையும் வரையும் ரிமாண்டும் விதித்தார்.

இலங்கை-யூகோ வர்த்தக ஒப்பந்தம்

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கும் யூகோஸ்லேவியாவுக்குமிடையில் இவ்வார இறுதியில் வர்த்தக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவிருக்கிறது.

யாழ். கச்சேரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிலர் தீவைக்க எத்தனித்தனர். இதை எனது தந்தையார் பார்த்துச் சத்தமிட்டதும் அவர்கள் ஓடிவிட்டனர். இது பற்றிப் பொலிசார் விசாரணை செய்கின்றனர். பெட்ரோல் தகரங்கள் அந்த இடத்தில் கிடந்தன.

ச்சம்பவம்பற்றி எனக்குத் தகவல் கிடைத்ததும் நான் அவசர அவசரமாகக் கொழும்பிலிருந்து புறப்பட்டுவந்தேன்."

இத் தீவைப்புச் செய்தி சம்பந்தமாக பொலிசாரிடம் விசாரிக்கலாமென நமது நிருபர் முயற்சி செய்தபொழுது பொலிஸ் சுப்பிரின்டென்ட், உதவி சுப்பிரின்டென்ட் கொழும்புக்குச் சென்றுள்ளதாகவும் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் வெளியே சென்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

டாக்டர்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லோரும் ஒன்று திரண்டு ஆலோசனை செய்து பி. எஸ். அவர்களை வருங்காலச் சந்ததியினரும் ஞாபகம் செய்யக் கூடியவகையில் ஞாபகச் சின்னம் அமைக்க முன்வரவேண்டும்.

நாவலர் பெருமான் தமிழையும் சைவத்தையும் நம் நாட்டிலே பாதுகாத்தார். வைத்திய சிரோமணி எஸ். சுப்ரமணியம் அவர்கள் சைவத்தையும் தமிழையும் ஆயிரக்கணக்கான உயிர்களையும் பாதுகாத்த உத்தமராவர். அவர்களைப் போன்ற பெரியார் ஒருவரை நம் வாழ்நாளில் இனிக் காண முடியுமா!

மகா சிவராத்திரி

யாழ்ப்பாணம், செவ்வாய்

சிதம்பரத்தில் இன்று சிவராத்திரி அனுஷ்டிக்க ஏற்பாடாகியுள்ளதாக தெரியவருகிறது இதைக் கைக்கொண்டு கொழும்பு பொன்னம்பலவானேஸ்வரர், நல்லூர் நல்லைநாதர் சிவன்கோவில், நல்லூர் முத்து வினாயகர் கோவில், முன்னேஸ்வரம் முன்னநாதர், நல்லூர் கைலாசநாத சிவன்கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக வினாயகர் கோவில், நீர்வேலி கந்தசுவாமி. ஏழாலை குருமடம் பிள்ளையார் கோவில், நல்லூர் மனோன்மணியம்மை, தம்பலகாமம் கோணேசர் கோவில், மானிப்பாய் மருதடி வினாயகர் கோவில், இருபாலை மதுரை முத்துமாரி கோவில், இருபாலை சிவசுப்பிரமணியர், கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில், சித்தங்கேணி மஹாகணபதிப் பிள்ளையார் கோவில் சுதுமலை புவனேஸ்வரி கோவில் திருநெல்வேலி காயாரோகனேஸ்வர சிவன்கோவில், அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில், திருநெல்வேலி முத்துமாரியம்மை கோவில், கந்தவனம் சுப்பிரமணியசுவாமி கோவில், வண்ணார்பண்ணை வீரமாகாளியம்மை பருத்தித்துறை சண்டிகா பரமேஸ்வரி கோவில், நாகர் கோவில் நாகதம்பிரான் கோவில், யாழ்ப்பாணம் கொட்டடி வீரகத்தி வினாயகர் கோவில், வல்வெட்டித்துறை வைத்தியேஸ்வரர், அராலி மேற்கு விசுவநாதர் கோவில், அராலி நாகேந்திர மடம் சிவன்கோவில், அராலி அம்மன் கோவில், கொக்குவில் கிழகக்கு வினாயகர் கோவில், கொக்குவில் மேற்கு கந்தசுவாமி கோவில் ஆகிய ஆலயங்களிலும் இன்னும் பல ஆலயங்களிலும் இன்று சிவராத்திரி கொண்டாடப்படுகிறது.

தும்பளை

லூர்து மாதா திருநாள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இன்று செவ்வாய்க்கிழமை தும்பளை லூர்து மாதா திருநாள். பல்லாண்டுகாலமாக பக்தர்கள் பணிந்து போற்றும் ஒரு கத்தோலிக்க யாத்திரை ஸ்தலம் இது. அற்புத நீரூற்று சுரந்து, பல நோய் பிணிகளை தீர்க்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தீவின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கலந்துகொள்கின்றனர்.

பார்லிமெண்ட் இன்று கூடுகிறது

கொழும்பு, திங்கள்

ஜனப்பிரதிநிதிகள் சபையும் செனட் சபையும் நாளை கூடுகின்றன.

உப-சபாநாயகர் தெரிவும் நாளைய ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் இடம் பெறும்.

சரோஜினி நாயுடு ஞாபகார்த்த முத்திரை

புதுடில்லி, பெப். 10

சரோஜினி நாயுடுவின் 85-வது ஆண்டுதினத்தைஞாபகப்படுத்தும் வகையில்எதிர்வரும் 13-ம் திகதி அவரது உருவப் படம் பொறித்த முத்திரை இந்தியாவில் வெளியிடப்படவிருக்கிறது.

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டி ரோட் 3-ம் கட்டை முனிசிபல் எல்லைக்கருகாமையில் 90 பரப்பு காணி விற்பனைக்கிருக்கிறது. வீடு கட்டுதற்கேற்ற நிலம் 6 1/2பரப்பு. மிகுதி மிகவும் திறமையான தெற்காணி.

யோசேப் திருச்செல்வம்,123 மெயின் ரோட், யாழ்ப்பாணம்.

1950

2-வது மகத்தான வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) ரினாரா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீகிருஷ்ணா ([illegible]) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி,

புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி

பி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்

மொடர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள், அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.

இசை: கே. வி. மகாதேவன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 53-ம் இலக்கத்தில் [illegible] அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது